[1972 ஆகஸ்ட் 18

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொருளாதார வளர்ச்சியின் காரணமாகப் பெரிய தொழிற்துறைகளை விரிவு படுத்துவதன் மூலமாக வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற அடிப்படையில் இதுவரையில் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இப்பொழுது நம்முடைய மாநிலத் திட்ட ஆணைக்குழு, அதற்கு நேர்மாறாக, வேலை வாய்ப்புக்களை அடிப்படையாக வைத்துப் பெரிய திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்ற வகையில் அதை ஆராய்ந்து வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : வேலை வாய்ப்பின்மையைத் தீர்ப்பதற்குத் திட்டம் இடும்போது படித்து வேலையில்லாம லிருப்பவர்களை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளுகிறார்களா ? படிக்காமல் கிராமப் புறங்களில் வேலையில்லாமலிருக்கும் மக்களையும் கணக்கில் எடுத்து அதற்கான திட்டம் வகுக்க உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதில் முதன்மையாக, படித்து வேலை இல்லாமல் இருக்கிறவர்களைக் கணக்கில் எடுக்க வேண்டும். அதன் தொடர்பாக, கிராமப் புறங்களில் படிக்காமலும் வேலையில்லாமலும் இருக்கின்றவர்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

Schools run by Slum Clearance Board

* 148 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whethr any Swedish Social Service Organisation is offering assistance to the Slum Clearance Board to run schools at tenements areas; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை ; (இ) இந்த வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ் : ஸ்லம் கிளியரன்ஸ் போர்டுக்கு தமிழ் நாட்டில் வேறு சோஷல் சர்விஸ் ஆர்கனைசேஷன், பள்ளி நடத்துவதற்கு உதவித் தொகை ஏதேனும் கொடுத்து வருகிறதா ?

1972 ஆகஸ்டு 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிசை வாரியப் பகுதிகளுக்கு ஏதாவது அப்படி உதவித் தொகை வருகிறதா என்பது கேள்வி. அப்படி உதவி ஏதுவும் வரவில்லை.

ஆங்கில ஏடு வெளியீடு

* 149 **வினா—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநில சுயாட்சி கோரிக்கைகள் குறித்து பிற மாநிலத்தவரும் வெளி நாட்டவரும் புரிந்து கொள்கிற வகையில் தமிழ்நாடு அரசு ஆங்கில ஏடு நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : மாநில சுயாட்சியின் நோக்கம் குறித்தும், நமக்குத் தேவையான அதிகாரங்களைக் குறித்தும் பொது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்காகச் செய்தித் துறையின் மூலமாகச் செய்திப் படங்கள் தயாரித்து அவற்றை மக்கள் தொடர்பு அதிகாரிகள் மூலமாகக் கிராமங்களில் பிரசாரம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவ்வாறு இந்த அரசாங்கத்தின் சார்பிலே செய்வதாக உத்தேசம் இல்லை. ஆனாலும், இப்பொழுது ஆங்கிலப் பத்திரிகையில் எழுதுகின்ற கட்டுரைகள் மூலமாகவும், வேறு மாநாடுகளிலும் மற்ற பிரசாரக் கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லப்படுகிற தகவல்கள் மூலமாகவும், நிருபர்களிடத்தில் விளக்குவதன் மூலமாகவும், பல்வேறு நல்ல அரசியல் மேதைகளைச் சந்திக்கும்போது அவர்களிடத்தில் விஷயங்களை விளக்குவதன் மூலமாகவும் மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. சட்டப் பேரவையில்கூட மாநில சுயாட்சியின் முக்கியத்துவம் பற்றிப் பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாநில சுயாட்சி சம்பந்தமாக இராஜ மன்னார் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பல நாட்கள் ஆகின்றன. முதல் அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிப்போம்